ஆலையடிவேம்பு பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) ரூபா 4,950,000 பெறுமதியான 11 வாகனங்களின் உரிமை சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தும் அப்பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 45 வகையான அலுவலக தளபாடங்கள் மீளாய்வாண்டில் ஏலவிற்பனை மூலம் ரூபா 210,775 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டும் 21 வகையான அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் அழிக்கப்பட்டிருந்தும் இப் பொருட்களின் கிரயம் மதிப்பிடப்பட்டு கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய கணக்கு

1991 முதல் நிலுவையாக காணப்பட்ட மரணமடைந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 65,070 கடன் மீதியை அவர்களின் மரணப்பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 549,198 மொத்தப் பெறுமதியான் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 09 வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (இ) அரசாங்கப் பெறுகை வழிகாட்டியின் பிரிவு 5.4.12 | பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிற்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர்வரி தொடர்பான விபரங்கள், அடுத்துவரும் மாதத்தின் 15ஆந் திகதிக்கு முன்னர், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான ஒரு பிரதியுடன், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டிய போதிலும், 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுயில் செலுத்தப்பட்ட ரூபா 12,996,980 பெறுமதியான பெறுமதி சேர்வரி தொடர்பான விபரம் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 5,079,193 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,709,759 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,630,566 பின்னடைவைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வாடகை மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே 62 வீதம் மற்றும் 82 வீதத்தினால் அதிகரித்தும், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் அரசிறை மானியம் முறையே 32 வீதம் மற்றும் 12 வீதத்தினால் குறைவடைந்தும் காணப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இறைச்சிக் கடை குத்தகை

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடை குத்தகை நிலுவை ரூபா 606,313 தொகையில் ரூபா 526,313 நிலுவைத் தொகை 03 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

(ஆ) வியாபார வரி

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வியாபார வரி நிலுவை ரூபா 16,680 தொகை 09 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

(இ) பொதுச்சந்தைக் கடைத்தொகுதிக்கான வாடகை வருமானம்

பொதுச்சந்தைக் கடைத்தொகுதியில் உள்ள 16 கடைகளில் 10 கடைகள் நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படுகின்றன. மேலும், 2009 ஆம் ஆண்டில் ரூபா 1,500 மற்றும் ரூபா 2,500 மாதாந்த வாடகைக்கு கடைகளை வாடகைக்கு பெற்ற நபர்களுக்கே இன்றுவரை தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வாடகைக்குப் பெற்றவர்களில் சிலர் அக்கடைகளை ரூபா 5,000 மதாந்த வாடகையில்

உபகுத்தகைக்கு வழங்கியுள்ளனர். எனவே தற்பொழுது நிலவும் வாடகைப் பெறுமதியை கவனத்திற் கொள்ளாது அதே வாடகைப் பெறுமதியில் வழங்கிவருவதனால் சபை வருடாந்தம் ரூபா 240,000 தொகையான வருமானத்தினை இழந்துள்ளது.

(ஈ) பொதுச்சந்தை வாகனத் தரிப்பிடக் குத்தகை

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பொதுச்சந்தைக்கு அருகாமையிலுள்ள வாகனத் தரிப்பிடத்திற்கான வாடகை நிலுவை ரூபா 63,000 தொகை 02 ஆண்டுகளாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

2.3.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 577 வர்த்தக நிலையங்கள் மற்றும் 7,851 வீடுகள் மீது வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 4,000,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பேணப்படும் காசேட்டின்படி, மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 8.81 மில்லியன் முதல் ரூபா 12.74 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி காணப்பட்டன. இதனை வட்டி உழைக்கும் நிலையான வைப்பு அல்லது அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்து வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்காததால் சபையானது அண்ணளவாக ரூபா 500,000 தொகையான வட்டி வருமானத்தினை வருடாந்தம் இழந்து வருகின்றது.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் செயற்திட்ட அலுவலகங்களிடமிருந்து பெறப்பட்டு சபையினால் பன்படுத்தப்பட்டுவருகின்ற 12 வாகனங்கள் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக உரிமை மாற்றப்படாமல் காணப்படுகின்றது.

(இ) திருத்தியமைத்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட சபைக்குச் சொந்தமான கப் வாகனம், கல் அமுக்கி இயந்திரம் மற்றும் 04 இழுவைப் பெட்டிகளை திருத்தி பயன்படுத்தாமல் 02 ஆண்டுகளுக்கு மேலாக பாவனையற்று காணப்படுகின்றது.

(ஈ) யுனப்ஸ் நிறுவனத்தினால் 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 2 மோட்டார் வாகனங்கள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்படுகின்றது.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

3.2.1 வீதிகளுக்கு கிறவல் இடல்

2016 ஆம் ஆண்டுக்கான பிரதேச சபைகளை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 06 வீதிகளுக்கு கிறவல் இடப்பட்டமை தொடர்பாக 2017 செப்தம்பர் 07 ஆம் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொண்ட நேரடிப் பரீட்சிப்பின் போது பெறப்பட்ட அளவின்படி அவ்வீதிகளிற்கு 436 கியூப் கிறவல் மற்றும் 42 கியூப் கிறசர்தூள் என்பன இடப்பட்டிருந்தது. இருப்பினும் சபையினால் 561 கியூப் கிறவல் மற்றும் 117 கியூப் கிறசர்தூள்களிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கமைய ரூபா 610,500 மேலதிக கொடுப்பனவு இடம் பெற்றுள்ளது.

3.3 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை கண்ணகிபுர கிராமத்தின் திறந்தவெளியில் குவிப்பதனால் சுஃழல் மாசடைவதோடு அக்கிராமத்தில் வாழும் மக்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கு பாதிப்பும் ஏற்படுகின்றது. எனவே இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு திண்மக் கழிவுகளை மீள்சுழற்சி முறையில் சேதனைப் பசளையாக்கும் நிலையம் ரூபா 1,253,939 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தும், 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரை திண்மக் கழிவுகளை தரம்பிரித்து மீள்சுழற்சி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |